Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஞ (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது.

# இந்துசாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எரு] யாழ்ப்பாணம்:- சுபகிருதுஞு பங்குனிமீ உ௦உ வெள்ளிக்கிழமை (12 April. 1963) [இல-உ

## மாயாவாத தும்சகோளரி நா. கதிரைவேற்பிள்ளை ஞாபகம்

III.

[பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை]

பரபக்க இரகசியம்

உலகத்திலே எண்ணிறந்த சமயங்கள் உள்ளன. ஒவ்வொரு சமயத்தவரும் தத்தம் சமயமே சமயம் என்று சாதிப்பர். அத்தனை சமயங்களையும் ஒரு திருவருள் நடத்துகின்றது. அது நிறுத்துவதோர் குணம் இல்லாதது. விரிவிலா அறிவினர்கள் எரிவினாற் செய்யுஞ் சமயத்தையும் அது ஏற்றுக்கொள்ளும். கடவுள் இல்லை; திருவருள் என்றொரு பண்டம் இல்லை. என்பவர்களையும் அது கைவிடுவதில்லை. 'ஓடிமீள்கென ஆடல்பார்த்திருப்பது' அது. ஆடல் — ஆளுதல். ஆள் + தல் = ஆடல். எதனையும் அது தொடர்ந்து கொண்டேயிருக்கும். அதனை இன்றி எதுவும் அசையாதன்றே. திருவருள் இல்லை என்று சொல்லுவார்க்கும் சொல்லுவதொரு வல்லமையை நல்குவது அது. 'பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை' —வளர்த்தெடுக்கும் பெய்வளை — அந்தத் திருவருள்.

திருவருள் வடிவம் நீதி. நீதியையே செய்வதால் அது நீதி எனப்படுகிறது. எல்லாச் சமயங்களையும் அவரவர் தகுதிக்கு இயைந்தவாறு நடத்துகின்ற திருவருளின் நீதியை எது உணரவல்லதோ அதுவே உண்மைச் சமயம். அச் சமயத்தை அநுட்டிப்பவனே உண்மைச் சமயி.

உண்மைச்சமயி நீதிவழி நிற்பவன். அவன் ஏனை சமயங்களை நிந்திப்பதுமில்லை; அழிக்க முயலுவதுமில்லை. நிந்திப்பான் ஆனல், அழிக்க முயல்வான் ஆனல் அவன் எல்லாச் சமயங்களையும் நடத்தும் திருவருளாகிய நீதியை நிந்தித்தவன் ஆவன்; அம்மட்டோ அதனை அழிக்க முயல்பவனும் ஆவன். நீதி உலகை நடத்தும் நிலையை உணர்வது வேறு, நீதி வழி நடப்பது வேறு.

நீதி மனிதனைச் சிவசம்பந்தியாக்குவது; மேலானது. அதனாலே கச்சியப்பசிவாசாரியார்மேன்மை கொள் சைவநீதி என்று நீதியை விதந்தருளினர். சைவம் - சிவசம்பந்தம்.

இப்படிப்பட்ட நீதியைக் காணுஞ் சமயமே மெய்ச் சமயம் என்று சிவஞான சித்தியார் ஓதுகின்றது. நீதியைக் காணுஞ் சமயம் நீதி வழி நிற்கும் என்றவாறு.

'ஓது சமயங்கள்' என்று தொடங்கும் சித்தியார்ச் செய்யுள் உண்மைச் சமயத்தின் இலக்கணத்தை உரைப்பது.

எந்தச் சமயம் ஏனைய சமயங்களோடு முரண்பாடின்றி, ஒவ்வொரு சமயிக்கும் அவ்வச் சமயத்தின் வழி ஒழுக வேண்டி நேர்ந்திருக்கும் நீதியை உணருகின்றதோ, அந்தச் சமயம் மெய்ச் சமயம். அது திருவருளாகிய நீதியை முன்னிட்டுக் கொண்டு அதன் கருத்தை அறிகிற முறையில் அறிந்து நடக்கும் சமயம் ஆம். திருவருளாகிய நீதியை முன்னிட்டுப் பின் தொடரும் சமயத்தின் வழியே நேர்வழி.

திருவருளைத் தொடராத சமயங்களைத் திருவருள் தொடர்ந்துகொண்டிருக்கும். அஃது அதனியல்பு. சமயங்கள் கைவிட்டாலும் அது அவைகளைக் கைவிடுவதில்லை. அச் சமயங்கள் தன்னைப் பின் தொடரும் நாள் எந்நாளோ என்று, இரங்கி இரங்கித் திருவருள் அச் சமயங்களைப் பின் தொடரும். ஒரு நாளைக்கு அச் சமய வழிச் சென்றாரைத் தன் வழியில் நிறுத்தும். அவர்கள்வழி நேர்வழியாகாது மிக மிக நீண்ட வழியாம். திருவருளாகிய நீதியை முன்னிட்ட பின்பே அவர்களுக்கு நேர் வழி தொடங்கும். அதற்கு முன் தம் முனைப்பால நடந்து நடந்து அலைந்து தொலைத்தவழியை எண்ணி எண்ணி அவர்கள் நாணுவர். அவர்களை நோக்கி இனிப் 'பொய் வந்துழலும் சமய நெறிப் புகுத வேண்டா' என்கின்றார் தாயுமானவர். சூடு கண்ட பூனை இனி அடுக்களையை நாடாதன்றே, இது நிற்க.

திருவருளாகிய நீதியை முன்னிட்டு அதனை நாடுஞ் சமயம் மெய்ச்சமயம் என்பது மேலே சொல்லப்பட்டது. அந்த மெய்ச் சமயம் ஆறு வகைப்படும் என்று

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## நற்சிந்தனை

—:—

இறப்பும் பிறப்பு<br>
மெமக்கில்லை யென்றவன்<br>
அறமார் நல்லூ ராசானுமே.

## புதிய மாநகர முதல்வர்

திரு. ம. யோண் புதிய மாநகர முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்.

## வருஷப்பிறப்புத் திருவிழா விஞ்ஞாபனம்

=O=

எதிர்வரும் 14 4-63 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு அரியாலை ஸ்ரீ. ஞானவைரவசுவாமிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெறும் என்றும் மாலை 6 மணி தொடக்கம் விசேஷ மேளக்கச்சேரியும், 9 மணியளவில் வசந்தமண்டபப் பூசையும், பின் மேற்படி பெருமான் முத்துப்பல்லக்களாலும், மின்சார தீபங்களாலும் அலங்கரிக்கப் பெற்ற ரூமலி வாகனத்தில் தெருவீதி பவனிவருங் காட்சியும் நடைபெறும் என்றும் அறியப்படுகிறது.

உ

நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளே<br>
றொன்றுடையானை உமையொருபாக முடையானைச்<br>
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்<br>
குன்றுடையானைக் கூறவென்னுள்ளம் குளிருமே.

x x x

நன்மைபெருகு அருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்<br>
மன்னுதிருத தொண்டனார் வணங்கி மகிழ்ந்தெழும்பொழுதில்<br>
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தஞ்<br>
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினன் சிவபெருமான்.

## வைதிக சைவம்

வேதநெறி தழைத்தோங்க, மிகுசைவத் துறைவிளங்க,<br>
பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத<br>
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தன்<br>
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

சைவநெறியிலே நின்று ஆன்ம ஈடேற்றஞ் செய்யத் திரண்டுள்ள இப்பேரவைக்குத் தலைமை தாங்கியருளும் சைவப்புலவர் சங்கத் தலைவரவர்களே, எங்களையெல்லாம் ஒரு பொருளென மதித்து வரவேற்றுச் சைவப்பணிபுரியுமாறு ஊக்குவிக்கும் சால்பு மிக்க சபானந்த முத்தர்களாகிய பெரியோர்களே, சைவப் பேரறிஞர்களே, அவையிலே குழுமியிருக்கும் பெருமக்களே உங்களனைவருக்கும் அடியேனது பணிவார்ந்த வணக்கம்.

சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கம் முதன் முதலாக நடாத்தும் இம் மகாநாட்டில், எந்தவித மகாநாட்டிலும் பேசியறியாத என்னை முதன்முறையாகப் பேசவைத்து வழிப் படுத்தியமைக்குமகிழ்ந்து எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சங்கத்தார் எனக்குப் பணித்த பொருள் 'வைதிக சைவம்' என்பது. ஆண்டு அறிவு அனுபவங்களினல் சிறுமைப் பாடுடைய நான் அப்பொருள் மிகுதிகண்டு அஞ்சினேன். ஆயினும் எனது ஞானசிரியரது நற்கருத்துக்கள் கைகொடுத்துதவும் என்ற துணிவினல் உங்கள்முன் நிற்கிறேன். எனது அறிவுக்கெட்டாதுவருகின்ற பிழைகளைப் பெரியோர் பொறுப்பார்களாக.

இந்த உலகில் நாம் அனுபவித்து வரும் பண்டங்கள் இன்பம் துன்பம் இரண்டுமே. இவை எமது சொத்துக்கள். இன்பத்தில் விருப்பும் துன்பத்தில் வெறுப்புங் கொள்ளுவது ஆன்ம வியல்பு. என்றுங் குறைவுபடாத—அழிவற்ற இன்பம் அனுபவிப்பதொன்றே எமது குறிக்கோள். அக் குறிக்கோளை நிறைவு செய்து தருவதற்கு வழி செய்வதே சமயம், (அல்லாதது சமய மன்று) அங்ஙனம் படிமுறையாகத் துன்பம் நீக்கி, இன்பமொன்றே நல்கும் சமயத்திற்கு வைதிக சைவம் என்று பெயர்.

சைவ சமயத்தைப் பற்றிய தெளிந்த அறிவினலும் அதுபற்றி நடைபெறும் ஒழுகலாற்றினலும் ஆன்மா ஈடேறுவதற்கு இறைவனல் அருளப்பட்ட நூல்கள் இரண்டு. ஒன்று வேதம்;மற்றையது ஆகமம்.

வேதநூல் சைவநூல் என்று<br>
இரண்டே நூல்கள்<br>
நீதியினல் உலகர்க்கும்<br>
சத்திநிபாதர்க்குநிகழ்த்தியது

என்று சிவஞானம் சித்திக்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

நல்லைக்கீர்த்தனம் — 36.

## வேடங்கொண்டான் என் ஐயன்

— யாழ்ப்பாணம் ந. வீரமணி —

இராகம்: வாசஸ்பதி :: தாளம்: ஆதி

பல்லவி

பண்டார வேடம் கொண்டா னென்னையன்<br>
கண்டார்க் கருள்தரும் கார்த்திகேயன் - கோவணப்<br>
(பண்டார)

அனுபல்லவி

தண்டாயுதம் தரித்து தலைமாலையும் புனைந்து<br>
வண்டார் குழலி அரன்வாழ்த்தப் பழம்நினைந்து<br>
(பண்டார)

சரணம்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்<br>
அவர்களே யுலகம் அறிந்துநாம் உய்வம்<br>
முன்னை யுதித்திட்ட மூஷிக வாகனன்<br>
முதுமொழி யறிந்தவன் பழமது கிடைத்தனன்<br>
வன்னமயிலின்மீது வலம்வந்த வேலவன்<br>
வாகை சூடியும் கனிவாய்க்குக் கிட்டாதவன்<br>
கன்னல் தமிழினிமை கனியருந் திடுபவன்<br>
கடுங்கோபங் கொண்டொரு கண்டிகையும் ஏந்திப்<br>
(பண்டார)

இந்துசாதனம் ஆதரவாளர்களுக்கு எமது மங்களகரமான புத்தாண்டு வாழ்த்தைத் தெரிவிக்கிறோம்.

ஆ—ர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அறிவித்தல்

வருடப்பிறப்பை முன்னிட்டு எதிர் வரும் 13-4-63 சனிக்கிழமையும், 15-4-63 திங்கட்கிழமையும் இந்துசாதன அலுவலகத்திலும், சைவப் பிரகாச அச்சசத்திலும் வேலை நடைபெறுது. —அதிபர்.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சுபகிருது ஞூ பங்குனி மீ ௩௦ உ வெள்ளிக்கிழமை

## சோபகிருது சோபனம்சொல்வாம்

உருண்டு ஓடிக்கொண்டிருக்கும் காலவட்டத்தில் ஆண்டுகள் உரியகாலத்தில் மாறி மாறித் தோன்றும் பொழுது உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சி தழுவிய புது நம்பிக்கை தோன்றுவது வழக்கம். அவ்வாறே சுபகிருது தோன்றித் திங்கள் பன்னிரண்டு சென்றபின் சோபகிருது நாளை மற்றை நாள் உதயமாகும். அந்த மங்கலமான வேளையிலே தமிழ் இனம் 'வழியுண்டு' என்று தொடர்ந்து வாழவும் உரிய உரிமைகளை மீண்டும் பெற யாவரும் இறைவனை வணங்கி இடைவிடாது நன்முயற்சி செய்வதற்கு நம்பிக்கை உண்டு பண்ணும் வகையில் மக்கள் அனைவரும் விழா நடத்துவார்கள்.

'எல்லாம் தமிழ்' என்று இயங்கிவரும் தமிழ் இனம் 'எல்லாம் சைவம்' என்று உணர்ந்து வாழ்வது நன்று. 'எல்லாம் தமிழ்' என்று சொல்லும்பொழுது எல்லா வகையிலும் தமிழமரபு பிறழாது வாழ்வதே தமிழ்ச் சால்புஎன்பது பெறப்படும். அவ்வாறேஎல்லாவற்றிலும் சைவமரபு தவறாது வாழ்க்கையை நடத்துவதே சைவச் சால்பு என்பது போதரும்.

நாம் சீராக வாழ்வதற்கும் அதற்கு மாறாகச் சீர்கெடுவதற்கும் நாமே காரணர். எல்லாம் தமிழ் மரபு தழுவிநாம்வாழ்ந்துவந்தால் நல்லாய் அமையும் தமிழ் இன உரிமை. அவ்வண்ணமே எல்லா வழியிலும் சைவச்சால்புக்கு முரணாகாமல் நாம் செயலாற்றி வருவோமேயானல் எங்கள் மொழி உரிமையையோ இன உரிமையையோ மீண்டும் நாம் அநுபவிக்க முடியும்.

ஆகவே நற்றுணையாவது நமச்சிவாயவே என்றும் நடுக்கத்தைக் கொடுப்பது நமச்சிவாயவே என்றும் நலமிகக் கொடுப்பது நமச்சிவாயவே என்றும் நன்னெறியாவது நமச்சிவாயவே என்றும் திருநாவுக்கரச நாயனர் புத்தி புகட்டியதை நினைந்து திருவைந்தெழுத்தோதி வெந்துயர் தீர்ப்பது நீறு என்றும் அவலமறப்பது நீறு என்றும் வருத்தந் தணிப்பது நீறு என்றும் புன்மை தவிர்ப்பது நீறு என்றும் உண்மையில் உள்ளது நீறு என்றும் மானந் தருவது நீறு என்றும் மதியைத் தருவது நீறு என்றும் திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் தேவாரத்தைச் சிந்தைசெய்து திருநீறு பொலிந்து திகழும் நெற்றி யுடையவர்களாய்த் தமிழ் இனம் சிவபெருமானை இடையறாது வணங்கி வருவார்களானல் உரிய உரிமைகள் அத்தனையும் மக்கள் அடைவார்கள் சோபகிருதுவில் இந்த நெறியில் நின்று வாழ்வோமாக. அவ்வாழ்ந்து வழி காண்போமாக.

---

திருவதிகை - மனவாசகங்கடந்தார்

அருளிச் செய்த

# உண்மை விளக்கம்

மூலமும் உரையும்

[சித்தாந்த பண்டிதர், சைவப்புலவர் இ. செல்லத்துரை]

(முற்றொடர் - 13)

### இறைவன் அறிவுக்கறிவாய் நிற்றல்

அன்றியுங்கே ளான்மாவா லாய்ந்தறியு மைம்பொறிக
ளின்றி யறியா விவையென்ன — நின்றதுபோல்
ஓவாம லுன்னை யுணர்த்துவோ முன்னறிவில்
மேவாமல் மேவிநா மே. 28.

கொ—கூ: (அஃது) அன்றியும் (வேறும் உள) கேள்; ஆன்மாவால் ஆய்ந்து அறியும் ஐம்பொறிகள் (ஆன்மா) இன்றி அறியா; இவை என்ன நின்றதுபோல், நாமே உன் அறிவில் மேவாமல் மேவி, உன்னை ஓவாமல் (உனக்கு) உணர்த்துவோம்.

ப—ரை: அன்றியும் கேள் - முன்கூறிய அஃதேயல்லாமல் வேறும் உள; அவைகளைச் சொல்லுகிறோம் கேட்பாயாக; ஆன்மாவால் ஆய்ந்து அறியும் ஐம்பொறிகள் இன்றி அறியா - ஆன்மாவின் துணையினால் விடயங்களை அறிந்து காரியப்பட்டு வருகின்ற பஞ்சேந்திரியங்கள் "ஆன்மாவின் துணையினாலேயே (நாம்) அங்ஙனம் காரியப்பட்டு வருகின்றோம்" என உணரமாட்டா; இவை என்ன நின்றதுபோல் - இங்ஙனம் நின்ற இப்பஞ்சேந்திரியங்கள் (ஆன்மாவை அறியாமல் காரியப்பட்டமை) போல, நாமே உன் அறிவில் மேவாமல் மேவி - (உனது இயக்கத்துக்கு உறுதுணையாய் நின்ற எம்மை நீ உணராதிருக்கும் நிலையில்) நாம் உனது அறிவிலே (அறிவுக்கறிவாய்) பொருந்தாமல் பொருந்தி, உன்னை ஓவாமல் - உன்னைவிட்டு நீங்காமல் நின்று, உணர்த்துவோம் - உனக்கு அறிவித்துவருவோம் (அதனை நீ அறிவாய்)

ஐம்பொறிகள் சடமானவை அங்ஙனமாகவும், "கண் கண்டது; காது கேட்டது" என்பதெல்லாம் உபசார மாத்திரையே காண்டல் கேட்டல் முதலியவற்றை இப்பொறிகள்மூலம் ஆன்மாவே உணர்கின்றது; பொறிகள் உணாவதில்லை. மேலும், ஆன்மாவின் துணையால் வாழ்ந்து காரியப்படும் பொறிகள் ஆன்மாவையும் உணர்வதில்லை. இவை தமக்குத் துணையான ஆன்மாவை உணராமைபோல ஆன்மாவும் தனது உணர்வுக்கு இறைவன் இன்றியமையாதவன என்பதை உணர்வதில்லை, இக்கருத்தைபற்றி "ஊன் உயிரால் வாழும் ஒருமைத்தே ஊனுடுயிர், தானுணர்வோடொன்றாந் தரம்') எனத் திருவருட்பயன் வலியுறுத்துவதுங் காண்க.

பொழிப்பு: தமது காரியப்பாட்டுக்கு உறுதுணையாய் நின்ற ஆன்மாவை அறியாத ஐம்பொறிகள்போல, நீ (ஆன்மா) உனது காரியப்பாட்டுக்கு உறுதுணையான எம்மை (இறைவனை) அறியாது நிற்க, நாம் உனது அறிவை பொருந்திவிட்டு நீங்குதலின்றி அறிவித்து வருவோம்.

### இறைவன் உயிர்க்குயிராய் நிற்றல்

அக்கரங்கட் கெல்லா மகரவுயிர் நின்றாற்போல்
மிக்க வுயிர்க்குயிராய் மேவினோம் — எக்கண்ணும்
நில்லா விடத்துயிர்க்கு நில்லா தறிவென்று
நல்லா கமமோதும் நாடு. 29.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

---

## அணிந்துரை அரங்கம்

**தூவுதும் மலரே**

(கதைகூறும் கவிதைகள்)

இயற்றியவர்:

ஈழத்துக்கூழ இறையனர்.

சீதனக்காதை, விந்தை முதியோன், பாணர், புரவலன், தீவெட்டிக்கள்ளர் என்னும் நான்கு சிறுகாவியங்களைக் கொண்ட இந்த நூலை யாத்த கூழ இறையனரின் இயற்பெயர் நூலில் காணப்படவில்லை.

கவிதைகள் யாவும் ஆசிரியப்பா நடையிலேயே அமைந்துள்ளன.

செம்மை பொருந்திய பழந் தமிழ் நடையில், பழைய இலக்கிய அமைதியில் எழுந்த இச்செய்யுள்களின்

---

# தமிழ்வாழ, ஆட்சிமொழியாக ஒன்றே ஒன்று செய்யுங்கள்!

பண்டிதர் கா பொ. இரத்தினம் எம் ஏ.

உங்கள் தாய்மொழியாந் தமிழை வாழவைக்க விரும்புகிறீர்களா? சிங்களத்துடன் தமிழும் ஓர் ஆட்சி மொழியாக இலங்கையில் விளங்க வேண்டுமா? தமிழ் எல்லா அரசாங்க அலுவலகங்களிலும் வாழ வேண்டுமா? கம்பனிகள், வியாபார நிலையங்கள், வங்கிகள் முதலியவற்றிலும் தமிழ் இடம் பெற வேண்டுமா? தமிழ் பேசும் மக்களின்றி எந்த நிலையமும் நன்கு இயங்காமற் செய்ய வேண்டுமா? தமிழ் பேசும் மக்களுக்கு எல்லா அலுவலகங்களிலும் உத்தியோகம் கிடைக்க வேண்டுமா? சிங்களச் சகோதரர்களுக்குத் தமிழின்றி இந்நாட்டை ஆள முடியாது என்பதைப் புலப்படுத்த வேண்டுமா? தமிழ்ப் பகுதிகளில் தமிழ் தெரியாத உத்தியோகத்தர்கள் வேலை பார்க்காமல் செய்ய வேண்டுமா? தமிழ்ப் பகுதிகளில் தமிழே ஆட்சி மொழியாக முதன்மைபெற வேண்டுமா? தமிழ் இழந்த உரிமைகளைப் பெற்று அரியணை ஏற வேண்டுமா? தமிழ் பேசும் மக்கள் தலை நிமிர்ந்து மானத்துடன் வாழ வேண்டுமா? இவையும் இவை போன்றனவும் வேண்டுமெனில் ஒன்றே ஒன்று செய்யுங்கள். தமிழ் பேசும் மக்கள் யாவராலும் செய்யத் தக்க ஒன்றையே கேட்கிறோம்.

சொல்லடி, பொல்லடி, கல்லடிபடாமல் இலகுவில் செய்யத்தக்க ஒன்றையே கேட்கிறோம். உயிரைக் கொடாமல், பொருளை இழக்காமல், பிறரைக்கெஞ்சாமல் செய்யத்தக்க ஒன்றையே கேட்கிறோம். எவ்வித சிரமமுமின்றி, எவரோடும் பகைக்காமல், எந்நாளும் செய்யத்தக்க ஒன்றையே கேட்கிறோம். மாணவர்களும், ஆசிரியர்களும், அரசாங்க உத்தியோகத்தர்களும் பிறரும், எல்லா அரசியற் கட்சியினர்களும் தொழிலாளிகளும் முதலாளிகளும் எல்லோரும் ஒன்றுபட்டுச் செய்யத்தக்க ஒன்றையே கேட்கிறோம். உங்கள் யாவரையும் நீங்கள் செய்வன யாவற்றையும் தமிழிலேயே செய்ய இன்றே உறுதிபூண்டு அவ்வாறே செய்யுங்கள் என்ற ஒன்றையே கேட்கிறோம்.

---

சிறப்பை அடிக்கடி விரவி வரும் கொச்சை வார்த்தைகளும் யாழ்ப்பாணப் பேச்சு மொழியும் கெடுத்து அவிழுந் தண்ணீரும் நடையாக்கி விட்டுள்ளமை வெளிப்படை. ஆனல் இதனை யாத்தவர் நிச்சயம் தமிழ் போதியளவு கற்றவராகவே இருத்தல் வேண்டும் என்ற எண்ணத்தை, சொல் திரிபுகளும், விகாரங்களும், உருபு உபயோகங்களும் காட்டி நிற்கின்றன.

ச. வே. பஞ்சாட்சரம்.

---

### பிரார்த்தனை

சிவனே! மங்களரூப! எல்லா உலகங்களுக்கும் சகலருக்கும் துணையானவரே! ஆனந்தமே வடிவாக உடையவரே! உமா தேவியாருடன் கூடிய உமக்கு பணிவிடை புரிய நற்குணமுள்ள புத்தி என்னும் என் மகப் பெண்வண உமக்களிக்கிறேன். எனது மனமென்னும் வீட்டில் எப்பொழுதும் நீர் வாசம் செய்ய வேண்டும்.

- சிவாநந்த லஹரி,

---

தமிழியக்கத் தொண்டர்களாகவிளங்குங்கள் என்றே கேட்கிறோம்! சென்ற பத்தாண்டுகளாகத் தமிழியக்கத்தைப் பரப்பிவரும் நான் செய்து வருபவற்றை நீங்களும் செய்யுங்கள்! சிறிதும் தயங்க வேண்டாம்.

**தமிழ் வாழ்க!**

### நல்லூரில் சமயப்பிரசாரம்

நல்லூர் தேவஸ்தான சண்முகதீர்த்த மண்டபத்தில் அ. இ. பொ. சே. சங்க ஆதரவில் இன்று நிகழும் சமயப்பிரசார வைபவத்தில் ஸ்ரான்லிக் கல்லூரி ஆசிரியர் திரு ச. மயில்வாகனம் அவர்களால் "இறைவன்" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவு ஆற்றப்படும்.

### தேகவியோகம்

நவாலியூர் திரு. க. சோமசுந்தரப் புலவருடைய தம்பியாரும நீண்டகாலம் கண்டியில் தோட்டப்பகுதிக் காரியாலய சங்கக் காரியதரிசியாகவும் கடமையாற்றி இளைப்பாறியிருக்கும் திரு. க. வேலுப்பிள்ளை அவர்களின் பாரியார் ஸ்ரீமதி இராசம்மா அவர்கள் 9-4-63 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தனர். தமது கணவனுடன் அண்மையில் சிதம்பரம், திருச்செந்தூர், திருவொற்றியூர் முதலிய புண்ணிய தலங்களுக்கு யாத்திரைசென்று வந்தவர். விவாகம் செய்துகொண்ட காலந் தொடக்கம் கணவனுடைய தவ வாழ்க்கைக்கு உறுதுணையாக விருந்தவர். கதிர்காமத்தையனிடம் அளவிறந்த பக்தி பூண்டவர். கணவனும் அம்மையாரும் யோகர் சுவாமிகளிடத்தில் மிகுந்த அன்புடையவர்கள். விருந்தோம்பல், ஆசாரம், ஈசுர பக்தி, பதிபக்தி, இரக்கம், பொறை, ஈகை முதலிய பண்புகளுக்கு உறைவிடமாகவுள்ளவர். திருவாட்டிகள் ஜயலட்சுமி, ஞானப்பூங்கோதை, ஸ்ரீமாதேவி ஆகிய அவருடைய பெண்மகவுகளுக்கும் அவர்களுடைய குடும்பத்தவர்களுக்கும எங்கள் அநுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைக்கு வரித்தனுப்பிய ரூபா 2-00ம் பெற்றுக்கொண்டோம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
இல. M B. 3878
ஆஸ்பத்திரி வீதி
B, J. பெனடிக்கின் மகள் மேரி
- வழக்காளி.

எதிராக
மூலவாய்ச்சந்தி ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம்.

(1) P. அந்தோனிப்பிள்ளை மனைவி
(2) திரேசம்மா
(3) S. P. துரைராசா மனைவி
(4) புஷ்பம்
(5) M. தேவசகாயம் மனைவி
(6) செபமாலே
(7) V. சிவகுரு
(8) S. அமுதராசா
(9) K. சூசைமுத்துவும் மனைவி மோனம்மா

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 3878ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளேப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஆதனம் 1963ம் ஆண்டு ஆனி மாதம் 15ம் திகதி சனிக்கிழமை (15-6-63) பிற்பகல் 2 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை

ரூபா 7350 க்கும் இன்னும் ரூபா 6000 க்கும் 3-2-61 தொடக்கம் 13-3-62 வரைக்கும் 12% வட்டியும் அதன்பின் கூடிய முழுத்தொகைக்கும் 5% வட்டியும் கொடுக்கும் வரையும் இறுக்க வேண்டும், இதில் ரூபா 1375, 12-5-62ம் திகதி கட்டப்பட்டு விட்டது. இதில்கோட்டுச்செலவு ரூபா 12.

காணிவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளி கோயிற்பற்றுகரையூர் இறை "கொண்டையாண்டி தோட்டம்" என்னும் காணி நில. பரப்பு 2ம் 3 குளியும். எல்லே கிழக்கு மடத்துவீதி (Convent Road) வடக்குஆஸ்பத்திரி வீதி, மேற்கு பாவிலு கைப்பெண் விக்ரரும் பங்காளரும் தெற்கு சு. தொமஸ். இதில் பிரிக்கப்படாத முக்கால் (3/4) பங்கு.

இ. கனகரெத்தினம்,
கொம்மிஷனரும்,
விலேமதிப்பாளரும்.
கம்-35 கொழும்புத்துறைவீதி
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
1-4-63,
M 7 12-4-63

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

ஊர்காவற்றுறை நாரந்தனே
அவுருன் இராசேந்திரம்
வழக்காளி.

எதிராக
வழ. இல. M B. 4976
ஊர்காவற்றுறை நாரந்தனே
இறிற்ரூ செவாஸ்ரி
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 4976ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளேப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1963 ம் ௵ மே (வைகாசி) மீ 18 உ (18-5-63) சனிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்றுபிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 3000. மேலும் ரூபா 1500-க்கும் 1-8-62 திகதி தொடக்கம் 25-10-62வரைக்கும்வருடமொன்றுக்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5 வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபா 210 ரூபா. 57 சதமும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுகள் பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று நாரந்தனே இறை "சுடலேபுலம்" நிலப்பரப்பு 10. கிணறும். கிணற்றின் தண்ணீர்ப்பங்கும் இதற்கு எல்லே கிழக்கு வயித்தியாம்பிள்ளை மனவல்பிள்ளேயினுதனம். வடக்கு அந்திரேசுபிள்ளே அலேசுப்பிள்ளேயின் உரிமைக்காரர்களுக்கும் மறுபேர்களுக்குமுரிய ஆதனங்கள், மேற்கு மனவல் அலேசுவுக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம். தெற்கு வெற்று நிலம் பதிவு C 212/182.

வி. செ. குட்டிப்பிள்ளே,
கொமிஷனர்.
23-3-63
613 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
M 3, 12-4-63,

# வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்

வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் கோபாலாச்செட்டியார் புத்திரன் வைத்திலிங்கச் செட்டியாரால் இற்றைக்கு 173வருடங்களுக்குமுன் (கி.மு 1790-ல்) கட்டுவிக்கப்பட்டது

வைத்திலிங்கம் செட்டியார் தமக்கொரு சிறந்த மாளிகை கட்டவெண்ணித் தம்பிரானிடம் சென்று தமது கருத்தை வெளியிட்டனர். அவர், உன்னை இங்கிலேக்குக் கொண்டுவந்தவர் உனது பரமபிதாவாகிய வைத்திலிங்கக் கடவுளும உலக மாதாவாகிய தையல்நாயகித் தேவியாருமன்றே. அவர்க்காலயம் வகுத்தபின்னரே நீ உனக்கு மாளிகை கட்டவேண்டும் என்றனர். அதுகேட்ட செட்டியார் "அவ்வாறே செய்வேன்" என்று கூறித் தம்பிரான் வகுத்த இடத்தை வாங்கி வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் என்று இன்றும் ஈழநாட்டில் இணையற்று விளங்கும் சிவாலயத்தைக் கட்டிக் கும்பாபிஷேகஞ் செய்வித்துப் பறங்கிக்காரரால் நசுக்கப்பட்ட சைவப்பயிரை மீளவும் நிலேநாட்டினர். இத்திருப்பணிக்கு யாழ்ப்பாணத்துள்ள ஏனைய பிரபுக்களும் சிறிது பொருளும் பூசைக்கு விளைநிலங்களும் தோட்டங்களும் உதவினராயினும் பெரும்பாலும் வைத்திலிங்கச் செட்டியாரே தமதுதிரவியங்கொண்டுகட்டி முடித்தனர். இவரும் - தம்பிரானும செய்தவுபகாரம் யாழ்ப்பாணம் உள்ளவரையும் அவர்பெயரை விளக்கிக் கொண்டேயிருக்கும் இயல்பினதாம்.

இவ்வாலயம் மூர்த்தி தலம், தீர்த்தம் என்ற மூன்றும் ஒருங்கே தன்னகத்து அமையப்பெற்றது. இன்று இலங்கையிலுள்ள சைவ ஆலயங்களும், இவ்வாலயத்தைப் பின்பற்றியே நித்திய நைமித்தியங்கள் நடைபெற ஏதுவாகின்றது.

இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் உலகமாதாவாகிய தையல்நாயகி அம்பாள் என்றும் அடியார்களுக்கு அருள்சுரந்த வண்ணமேயிருக்கின்ருள் அம்மையின் அற்புதக்காட்சி அளவிடற்கரிது.

சைவமும் — தமிழும் வளர்ச்சிபெறத் தன்னைப் பரித்தியாகம் செய்த ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் பெருமானும் இவ்வாலயத்தில்தான் முதல் தனது சமயப்பிரசங்கத்தை அரம்பித்தார். அம்மை அப்பரின் அருட்கருணையாலே நாவலரின் சேவை பயன்பெற்றது. இன்று ஈழநாட்டின் சகல சைவப்பாடசாலேகளுக்கும் முன்மாதிரியாக நின்று மிளிருவது, வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலேயேயாகும்.

அவர்களுக்குப்பின் நாவலர் மருகராகிய வித்துவசிரோன்மணி ந. ச. பொன்னம்பலபிள்ளே ஆகியோரும் இவ்வாலயத்தில் தொடர்ந்து பிரசங்கம் செய்து வந்தனர்.

இன்று ஈழநாட்டிலே சிறந்த முறையில் சைவப்பணி புரிந்துவரும் பிரம்மஸ்ரீ C. S. S. மணிபாகவதர் அவர்களும் இவ்வாலயத்திலேயே தனது பிரசங்கத்தை முதலில் ஆற்றி வந்தார்கள் என்பது நாம் அறியக் கூடியதாக விருக்கின்றது.

இவ்வாறு அருட்கணை புரிந்துவருகின்ற வைத்தீஸ்வர ஆலயத்தின் பங்குனி மாதத்திருவிழா பங்குனி 7உ 20-3-63, புதன்கிழமை கொடியேற்ற விழாவுடன் (துவஜாரோகணம்) ஆரம்பமாகி பங்குனி 25 (7-4-63) ஞாயிறு தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெற்றது.

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 7328-ம் இலக்க வழக்கில் 1963-ம் ஆ பங்குனி மீ 19-ம் உ யைக் கொண்ட கோட்டுக்கட்டளேப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனம் 1963-ம்ஆ வைகாசி மீ 20-ம் உ திங்கட்கிழமை பிற்பகல் 4-30 மணி வரையில் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்:
வல்லுவெட்டி
1. கந்தையா பாலசிங்கம்
2. செல்லத்துரை துஷ்யந்தன்
3. பெண் மகேஸ்வரி
— வழக்காளிகள்.

எதிராக
உடுப்பிட்டி
நல்லதம்பி கிட்டிணசாமி
—எதிராளி.

அறவிடவேண்டிய தொகையின் விபரம்:

சித்தாரித்த தொகை ரூபா 4038-33. 15-2-62 தொடக்கம் 22-11-62 வரைக்கும் ரூபா 2500-க்கு 8 வீத வட்டி ரூபா 154, 22-11-62 தொடக்கம் 12-3-63 வரைக்கும் ரூபா 4192-33-க்கு 5 வீத வட்டி ரூபா 64-14. கூடிய ரூபா 4256-47 கோட்டுச் செலவு ரூபா 321-20. மொத்தம் ரூபா 4577-67.

ஆதனம்:

வல்லுவெட்டித்துறை இறை. முக்கரவத்தை மேற்குக்கலட்டியும் திகதிவரவை செம்பாட்டுத் தாழ்வும். இது 1942-ம்ஆ ஐப்பசிமீ 13-ம்உ உலாந்தா க. கணபதிப்பிள்ளேயால் 6670-ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டு யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 1507P என்னும் இலக்கப் பிரிவிடல் வழக்கில் அணைபட்ட படத்தின்படி நில. பர. 153, குளி 12 1/32. சொல்லப்பட்ட படத்தில் 8-ம் துண்டுக்கு நில. பர. 21, குளி 6' F என்று அடையாளமிட்ட கிணறும். எல்லே கிழக்கு வல்வை வயித்தீஸ்வரன் கோயிலுக்குடைய ஆதனமும் குளமும் வடக்கு பாலசிங்கம் பெண் சிவக்கொழுந்துவுக்குடைய ஆதனம். மேற்கு இளேயதம்பி வயித்திலிங்கத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு அருணுசலம் சுப்பிரமணியத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ்வெல்லேக்குட்பட்ட கிணறும்சேர முழுவதும் சொல்லப்பட்ட படத்தில் 3-ம் துண்டைப் பாவிக்கும் உரித்தும்.

S. C. Kanagasabai,
கொம்மிஷனர்.
[illegible] 12-4-1963,
M, 9, 12-4-63.

# உண்மை விளக்கம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொ—கு: அகர உயிர் அக்கரங்கட்கு எல்லாம் (அக்கரமாய்) நின்ருற்போல்; (நாம்) மிக்க உயிர்க்கு உயிராய் மேவினேம்; (சடசித்துக்கள்) எக்கண்ணும் (இறைவன்) நில்லா இடத்து உயிர்க்கு அறிவு நில்லாது என்று நல் ஆகமம் ஓதும்; நாடு.

ப—ரை: அகர உயிர் அக்கரங்கட்கு எல்லாம் (அக்கரமாய்) நின்ருற்போல் - 'அ' என்னும் உயிர் எழுத்தானது ஏனைய உயிர் எழுத்துகளுக்கெல்லாம் உயிராய் நின்று இயக்குமாறுபோல, மிக்க உயிர்க்கு உயிராய் மேவினேம் - நாம் எண்ணிறந்த ஆன்மாக்களிடத்தும் அவைகளை இயக்கும் உயிராகப் பொருந்தி நின்றேம்; எக்கண்ணும் நில்லா இடத்து உயிர்க்கு அறிவு நில்லாது என்று - சடசித்துக்கள் எல்லாவற்றிலும் இறைவன் பொருந்தி நின்று அறிவியாதவிடத்து உயிர் ஒன்றையும் அறியமாட்டாது என, நல் ஆகமம் ஓதும் - நல்ல சிவாகமங்கள் அறுதியிட்டுரைக்கும்; நாடு - நீ இந்த உண்மையை விசாரித்து அறிவாயாக.

அங்காத்தலின்றி எவ்வெழுத்துக்களுக்கும் இயக்கமில்லே. அங்காத்தலே அகரத்தின் பிறப்பு, எனவே, ஏனைய 'ஆ' முதல் 'ஔ' இறுதியாய உயிர்கள் அகரமின்றி இயங்காதாக, அகரம உயிர்க்குயிராயது. அங்ஙனமே, இறைவனும் ஆன்ம இயக்கத்துக்குக் காரணனுய் உயிர்க்குயிராயினன். "அகரவுயிரின்றேல் அக்கரங்களின்ரும்", "அகரவுயிர்போல் அறிவாகியெங்கும் நிகரிலிறை நிற்கும் நிறைந்து", "அகர முதல வெழுத்தெல்லா மாதி பகவன் முதற்றே யுலகு" முதலிய ஆன்றேர் வாக்குக்கள் ஈண்டு உய்த்துணரத்தக்கன.

பொழிப்பு; 'அ' என்னும் உயிர் ஏனைய உயிர்களுக்கு உயிராயினுற்போல, நாம் உயிர்க்கு உயிராய்ப் பொருந்தினேம்; (இக்கருத்தேபற்றி) "சடசித்துக்கள் யாவற்றிலும் இறைவனே நிறைந்து நின்று அறிவித்தாலன்றி ஆன்மா ஒன்றையும் அறியமாட்டாது" எனச் சிவாகமங்கள் கூறும் உண்மையை விசாரித்து அறிவாயாக.

—தொடரும்,

இவ்வாரம்   16-4-63 — 20-4-63

# உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

முதல்நாள் மாலே 2 மணிவரை சாதகமாயிருக்காது மிகுதி நாட்களில் ஓரளவு நற்செய்திகள் கிடைக்கும். வேலே அதிகமாயிருக்கும், போதியளவு ஈடு செய்யப்படமாட்டீர். உடல் நிலேக்குழப்பங்களும் உண்டாம்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

ஞாயிறு மாலே, திங்கள், செவ்வாய் எச்சரிக்கையோடு கழிய வேண்டும். ஏனைய நாட்கள் வியாபார ஈடுபாடுகளுக்கு ஏற்றவை. நிலபுலங்களால் இலாபம் நிச்சயம்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 2ம் பாதம்.

வார முற்பாதிக்காலம் தொழிலீடுபாடுகளுக்கு ஏற்றது. பழைய முதலீடுகள் நல்ல பயனைத்தரும். புதன் வியாழன் எச்சரிக்கையோடு கழியவேண்டும். இறுதி இருநாட்களும் திரும்பவும் சாதகமாகும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

பணமளவில் நல்ல வாரம். குடும்பவிவகாரங்கள் சச்சரவாகவே இருக்கும், உடல் நிலேயும் குழப்பமடையும். வெள்ளியும், சனியும் எச்சரிக்கையோடு கழியவேண்டும்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

எதிரிகளுக்கு இன்னல் நிச்சயம் கல்வி ஈடுபாடுகளில் வெற்றியும் உண்டாம். ஆனுல் நிம்மதி இருக்காது தூற்றித்திரிவோர்பற்றி எச்சரிக்கையாக இருக்கவும். தந்தைவழி உறவினர் தொல்லே தருவர்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

பணமளவில் நல்ல வாரம். நிலபுலங்களால் இலாபம் நிச்சயம். இனத்தவர் வழியான தொல்லேகளும் உடல்நிலேக் கோளாறுகளும் உண்டாம்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

நண்பர்கள் மிகவும் உதவுவர். நிலபுலங்களால் இலாபமும், இனத்தவருடன் மோதல்களும் உண்டாம். சில விரும்பத்தகாத கண்டனங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி வரும்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

தொழிலளவில் நல்ல வாரம். தடைகளையெல்லாம் தாண்டிவிட உம்மால் முடியும் புகழும் சமூக வெற்றியும் உண்டாம், ஆனுல் தந்தையாரின் உடல்நிலே குழப்பமடையும்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,

நண்பர்கள் இக்கட்டிலிருந்து மீட்பர். தம்பி தங்கையரும் உதவுவர், ஆனுல் சுகவீனங்களேற்படும். அலுவலகத்தில் சச்சரவுக்கிடமுண்டு.

**மகரராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

பணமளவில் ஓரளவு நல்ல வாரம். ஆனுல் குடும்பத்தகராறுகளும் இனத்தவருடன் சச்சரவுகளும் ஏற்படலாம். உமக்கு மனநிம்மதி இருக்காது.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

திரும்பவும் நல்ல வாரம், பண இலாபங்களும் எதிரிகளுக்கு இன்னலும் ஏற்படும், புகழும் சமூக வெற்றியும் உண்டாம். இனத்தவர்மூலமான தொல்லேகள் ஏற்படும்,

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

பணமளவில் நல்ல வாரம். விவசாய ஈடுபாடுகளில் வெற்றி நிச்சயம். ஆனுல் உடல்நிலே ஊறுபடும். இனத்தவர் மூலமான சச்சரவுகளுக்கும் இடமுண்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயாவாத தும்சகோளரி

1-ம் பக்கத் தொடர்ச்சி

ஞானிகள் கூறுவர். 'சமயம் ஆறே' என்பது ஆராய்ந்து தெளிதற் பாலது. 'ஒன்றது பேரூர் அதற்காறு வழியுள' என்பது திருமந்திரம். இந்த ஆறும் அகச்சமயம் எனவும்படும். ஆறும் எவை என்பது பெரிய விசாரத்துக்குரிய விஷயம். அவற்றை 'மெய்தரு சைவமாதி இருமூன்று' என்கின்றது சித்தியார். அகச்சமயம் ஆறில் ஒன்றுக்கு மாத்திரம் பெயர் கூறி அமைகின்றது சித்தியார் ஏனைய ஐந்தும் எவை? அறிஞர்கள் சிந்திக்கக் கடவர்கள். விரிப்பிற் பெருகும்.

திருவருளாகிய நீதியைத் தொடரும் மெய்ச்சமயங்கள் ஆறு. அவற்றில்ஒன்று சைவம் என்பது பெறப்பட்டது. ஏனைய ஐந்து சமயங்களின் பெயரும தெரியவில்லை என்று வைத்துக் கொள்ளுவோம். திருவருளாகிய நீதியை ஒரு வட்டத்தின் நடுப்புள்ளி என்று வைத்துக் கொண்டால், அப் புள்ளியைத் தொடும் ஆறு விட்டார்த்தங்களாயிருக்கும் சைவம் முதலிய ஆறு சமயங்கள் என்று கற்பனை செய்து பார்க்கலாம். ஆறு சமயத்துக்கும் அடிப்படையான அத்திபாரம் வேதாந்தம் என்று சாத்திரங்கள் கூறும். திருவருள் நீதியைத் தொடும ஆறு சமயங்களும் தொடங்குமிடம்வேதாநதம்.வேதாநதமாவது வேதத்தின் ஞான காண்டமாகிய உபநிடதம். ஆகவே வேதாந்தம் ஒரு வட்டத்தின் எல்லைக்கோடு. அந்த எல்லைக் கோட்டிலிருந்து நடுப் புள்ளியை நோக்கிச் செல்லுபவைகள் ஆறு சமயங்கள். இந்த ஆறு சமயத்திலும் ஒவ்வொரு சமயத்தையும் எடுத்துப் பார்த்தால், அச் சமயத்தில் பலநூறு துறைகள் இருக்கும். அத்துறைகளில் ஒரு துறையைப் பற்றிக் கொண்டே குறித்த புள்ளியை அடையலாம்.

'வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்க' என்பது திருஞான சம்பந்தர் புராணத்து முதற் செய்யுள். இதில் வேதநெறி வேதாந்தம். இது ஞானகாண்டமாகிய உபநிடதமாயினும், இதன் தொடக்கம் கருமகாண்டமாதலின் 'வேதநெறி' எனப்பட்டது. இந்த வேதாந்தத்தில் தொடங்குவதொரு சமயம் சைவம். அதில் மிகுதியான துறைகள் உண்டு ஆதலின் மிகு சைவத் துறை என்றூர்.

வேதத்தின் கருமகாண்ட வழி நின்று வேதாந்தத்தை அடைந்தவர்கள், சைவம் முதலிய ஆறு சமயங்களில் ஒரு சமயததிற் பிரவேசிப்பார்கள். பின், அச்சமயத்தில் ஒரு துறையைப் பற்றிக்கொண்டு குறித்த இலக்கை. அடைவார்கள். இது நேர்வழி.

இந்த நேர்வழியை நாடுகின்றவர்கள் ஒரு குருவை அடைந்து, நேர்வழி என்று நம்பி வேறு நெடுவழிகளிற் புகுதாமல் காத்தருள வேண்டுமென்று பிரார்த்திப்பார்கள். அவர்களுக்கு இரங்கி அவர்கள் நெடுவழிகளில் அலையாமற் போதிப்பதுதான் சைவ சாத்திரங்களிற் காணப்படும் பரபக்கம். இப் பரபக்கம் சுவபக்கத்தாருக்குப் போதிக்கப் பட்டது. அவர்கள் வழுக்கி வீழ்ந்து நெடுவழிகளில் அலையாதவாறு போதிக்கப் பட்டது.

சைவ சாத்திரங்களிற் பரபக்கம், மற்றைச் சமயத்தார்களுக்குத் தொடுத்ததொரு பாணமன்று. 'மற்றொரு சமயம் இருக்கக் கூடாது, அதை அழிக்க வேண்டும்' என்பது பரபக்கக் கருத்தன்று. அக்கருத்துத் திருவருள் நீதிக்கு மாறு.

தந்தை ஒருவன் தன் பிள்ளையைச் சன்மார்க்க நெறியிற் செல்லுவதற்கு வழி வகுப்பது போன்றது பரபக்கம். இந்தப் பரபக்க இரகசியத்தை வைத்துக் கொண்டு, மாயாவாத இயல்பை ஆராய்ந்து, மாயாவாத தும்சகோளரிபாற் செல்லுவோமாக.

—தொடரும்.

## நீச்சல் வீரன் செல்வன் ஆனந்தனுக்குப் பாராட்டு

3-4-63 ல் பலாலி - வயாவிளான் கி: மு சங்கத்தினராலும் வயாவிளான் பலாலி தெற்கு வா. ச. ச நிலையத்தினராலும் சங்கமண்டபத்தில் பலாலி - வயாவிளான் கி. மு சங்கத் தலைவர் ஆசிரியர் திரு சி. இராமலிங்கம் அவர்களின் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது. காரியதரிசி ஆசிரியர் திரு. சி. சிவஞானம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். பலாலி அரசினர் ஆசிரியர் கலாசாலை மாணவர்கள் திருவாளர்கள் இஸட். ஏ. எம். பஸீர்டீன், என். காதர்மெயினு, இ. சொக்கலிங்கம் அவர்களாலும், பிரம்மஸ்ரீ சீ. பாஸ்கரசர்மா, திருவாளர்கள் ஆசிரியர் மா. திருநாவுக்கரசு, ஏ. எஸ். இராமநாதனவர்களாலும் பாராட்டுரைகள் வழங்கப் பட்டன. ——

## அரிச்சந்திரன் மயானகாண்டம்

—0—

இன்று மாலை 6 மணிக்கு இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் பெற்ருர்தின விழாக் கொண்டாடப்படுகிறது. விழாவில், மா. சொர்ணலிங்கம், "தமிழர் நாகரீகம்' என்னும் விடயம் பற்றிச் சொற்பொழிவாற்றுவார் என்றும், 'அரிச்சந்திரன் மயானகாண்டம்' நாடகம் இடம்பெறும் என்றும் அறியப்படுகிறது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்
கோப்பாய், கோப்பாய் வடக்கு
கந்தர் முருகேசு —வழக்காளி.
எதிராக
கோப்பாய், கோப்பாய் வடக்கு
1. இளையதம்பி கதிரேசுவும் மனைவி
2. வள்ளிப்பிள்ளையும்
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB. 4792-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி இதன்கீழ் விபரிக்கப்படும் காணிகளை 1963-ம் ஆண்டு வைகாசி மீ 11-ந் உ சனிக்கிழமை (11-5-63) முற்பகல் 9-30 மணி தொடக்கம் அந்தந்த காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 4600/- மேலும் ரூபா 3000-க்கு 4-5-1962 தொடக்கம் 11-9-1962வரை 8 வீத வட்டியும் கூட்டிய தொகைக்கு 11-9-1962 தொடக்கம் இறுபடும்வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 232/- சதம் 65. கழிபட்ட தொகை ரூபா 1450/-

காணிகளின் விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாணப் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று கோப்பாய் வடக்கு இறை வலியந்தனை வி. பர. $1\frac{1}{4}$ ஒன்றேகாலும் கிணறும் வீடும். எல்லை கிழக்கு செல்லத்துரை பெண் பொன்னுவின் உரிமைக்காரரினுதனம் வடக்கு வேலுப்பிள்ளை பெண் செல்லாச்சிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். மேற்கு றேட்டு. தெற்கு பொன்னையா பெண் தெய்வானைப்பிள்ளையினுதனம் இதடங்கலும். வடகிழக்குப்பக்கமாகவிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் வழமையான வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்.

2. ஷை இறை கலம்புரை வி. பர. $1\frac{1}{4}$ ஒன்றேகாலும் செய்பயிர் வடலிகளும் வீடும், எல்லை கிழக்கு பூதத்தம்பி பெண் சின்னச்சியின் உரிமைக்காரரினுதனம். வடக்கு கந்தையா பெண் கயிலாயத்தினுதனம், மேற்கு முருகேசு நாகலிங்கத்தினுதனம், தெற்கு கார்த்திகேசு கைம்பெண் சின்னப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதடங்கலும் கிழக்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் தெற்கேயிருக்கும் தெருவிலிருந்து இதன் தென்புறக்காணிகளின் கிழக்கருகால் இக்காணிக்கு வரும் வழி உரித்தும்.

3. ஷை இறை தியாவத்தை வி. பர. 18 பதினெட்டும் பனைகள் வடலிகளும். எல்லை கிழக்கு காசிலிங்கம் அப்பாக்குட்டியின் ஆதனம், வடக்கு பூதத்தம்பி பொன்னையாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு வயிரவநாதர் சின்னத்தம்பியின் உரிமைக்காரரினுதனம், தெற்கு கந்தையா பெண் இலட்சுமிப்பிள்ளைககுரிய ஆதனம, இதடங்கலிற் சொரியலாய் $\frac{1}{2}$ அரைவாசியும் அதற்குரியவைகளும்.

4. ஷை இறை காதலிகல்லும் கதிரன் காதலிகல்லும் வி. பர. $8\frac{3}{4}$ எட்டேமுக்காலும், எல்லைகிழக்கு வயிரவி சின்னததம்பிக்கும பங்காளருக்குமுரிய ஆதனம், வடக்கு அம்பலவாணர் செல்லப்பாவின் உரிமைக்காரருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், மேற்கு சின்னத்தம்பி செல்லையாவுக்கும் பங்காளருக்கு முரிய ஆதனம், தெற்கு பூதத்தம்பி கந்தப்புவின் உரிமைக்காரருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதடங்கலிற் சொரியலாய் $\frac{1}{2}$ அரைவாசியும் அதற்குரியவைகளும்.

5. ஷை கோப்பாய் தெற்கு இறை அவரம்பிட்டி நெல். பர. 2 இரண்டு குளி $8\frac{1}{2}$ எட்டேயரைக்காலும் இதனுள்ளிருக்கும் கிணற்றில் பங்கும். எல்லை கிழக்கு சீனியர் கந்தையாவின் ஆதனம், வடக்கு வயிரமுத்து அம்பலவாணருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், மேற்கு சின்னத்தம்பி தம்பையாவின் ஆதனம், தெற்கு கந்தையா பெண் தெய்வானைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் இதடங்கலும்,

6. ஷை கோப்பாய் [illegible] இறை நகரத்தான் நெல் பர. 5 ஐந்து. எல்லை கிழக்கு சின்னப்பா கைம்பெண் பொன்னுவினுதனம், வடக்கு செல்லப்பா பெண் தெய்வானையினுதனம், மேற்கு பூதத்தம்பி பெண் சின்னச்சியின உரிமைகாரரினுதனம், தெற்கு அம்பலவாணர் இளையதம்பிககும மறுபேருககுமுரிய ஆதனங்கள இதடங்கலும்

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்,
45, 4-ம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 28-3-63.
M. 5 12-4-63.

## வைதிக சைவம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

கும் சித்தியார் அறுகயிட்டு உரைக்கின்ற அந்த இரண்டு நூல்களுள், வேதம தன்னைத் தான் காதலனுய ஒருவன், வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து பக்குவமுடையனுகுமாற்றை யுரைப்பது. ஆகமம், அங்ஙனம் வாழ்ந்து பக்குவமுடையனுயினுன் இறை வழிபட்டு ஒழுகவேண்டிய வழியை நாற்படியாக அறிவுறுத்துவது. வேதத்தின் வழிப்படுதலை வைதிகம எனவும், ஆகம வழிப்படுத்லைச் சைவம் எனவும் கொண்டு எமது சமயத்தை 'வைதிக சைவம்'' என மகான்கள் உரைப்பர்

படைபடையாய் அழுக்குப்பிடித்த கண்ணுடியில் ஒளி பிரகாசிக்கமாட்டாது அழுக்கு நீங்கியபின் அதன் சுய ஒளியும் பிரகாசிக்கும் சூரிய ஒளியும் பிரகாசிக்கும். இவ்வண்ணமே மும்மல அழுக்கால் மயங்கிக் கிடக்கும ஆன்மாவை அழுக்கு அகறறிப் பரிசுத்தம செய்து பக்குவப்படுத்த வைதிகநெறி உதவும் என்பதும், அவ்வான்மா பக்குவியான பின்னரே அகனிடத்து ஆன்ம ஒளியும சைவ நெறியால் வரத்தக்க சிவஞான ஒளியும் கைகூடும என்பதும், நாம் ஆராய்ந்து உணரத்தக்கன. இது இங்ஙனமாக, வைதிகம் அறியாதாரும் அந்நெறி கைக்கொண்டு ஒழுகாதாரும தம்மைச் சைவசமயிகள் எனப் பிதற்றித்திரிவது எவ்வாற்றானும் பொருந்தாதாம். எனவே, "வைதிகம் அறியாதார் சைவமறியாதாரே".

"நமது சமயம் வைதிக சைவம்; வைதிகம சர்வகலாசாலைப் பிரவேச வகுப்பு, சைவம் சர்வகலாசாலை வகுப்பு. சரியை, கிரியை, யோகம், ஞானம் (என்பன) வகுப்புககள் பிரவேசத்தில் சித்தியடையாமல் சர்வகலாசாலைக்குட் போகமுடியாது. உட்பிரவேச உத்தரவுதான் வைதிகம். வைதிகமின்றிச் சைவமில்லை."

—பண்டிதமணி, சி. க

தன்னைத்தான் காதலனுதல், அங்ஙனம காதலனுயினுன மறந்தும் இரண்டாமவனுக்குத் துன்பஞ் செய்யாமை, மழுமையின் பொருட்டுப் பசு புண்ணியஞ் செய்தல அப்பால பொருமை நீக்குதல முதலியன வைதிக நெறியாம. இங்ஙனம் வைதிகநெறியை அறிந்து மனமாசு நீங்கிய நிலையிலேயே சரியை முதலிய சைவநெறி கைக்கொள்ளத்தக்கது. வைதிக நெறி கைவரப்பெறுத எய்போலியர் அப்பால சைவ நெறியை அறியப்புகுதலும் அந்நெறியில பயிலுதலும பயனற்றனவாம எனக

இ செல்லத்துரை

## கொழும்பில் கூட்டுவழிபாடு

கொழும்பு சிந்துப்பிட்டி சுப்பிரமணியசுவாமி கோவிலில் பிரதி ஞாயிறு மாலைதோறும் நடைபெற்று வரும் கூட்டுப் பிரார்த்தனையின் சித்திரைமாத நிகழ்ச்சி நிரலின்படி வருடப் பிறப்பு அன்று 14-4-63இல கூட்டுப்பிரார்த்தனையுடன் விசேட பூசைகளும், 21-4-63 இல் பக்க வாத்தியசகிதம் கூட்டுப்பிரார்த்தனையும், 28-4-63 இல் பிரபல சமயக்கட்டுரை எழுத்தாளர் பிரம்மஸ்ரீ வ. குகசர்மா அவர்களின் (வானெலி அஞ்சல் செய்யவிருக்கும்) கந்தபுராணம் என்னும் ஆராய்ச்சிச் சொற்பொழிவும் நடைபெறவிருக்கின்றன.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—||—

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்

வட்டுக்கோட்டை மேற்கு
வயிரமுத்து கந்தையா
—வழக்காளி.
இல. M. B 3953

எதிராக
சங்கானை
1. கந்தையா சண்முகசுந்தரம்
2. கந்தையா விஜயரத்தினம்
எதிராளிகள்.

யாழ்ப்பாணம்டிஸ்திறிக்கோட்டின் M B 3953-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் 2 துண்டுக காணிகளை 1963ம் ௵ வைகாசி மீ 18-ம் உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 4035-ம் 13-3-61 தொடக்கம் 29-8-62 வரைக்கும் ரூபாய் 3250 க்கு 10 வீதவட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 23?-97-ம் (செலவு செய்த தொகை ரூபா 165/87; மலியாத்துச் செலவு ரூபா 42-90; ஏற்படக்கூடிய தொகை ரூபா 24-20)

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானைக் கோவிற்பற்று சங்கானை இறையும் சங்கானை கிழக்இறையும் 'மலப்பைவளவு'' பர.கில.இலாச்சம் இரண்டும் கல்வீடுகளும் வான் பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு சின்னததம்பி வல்லிபுரத்துக்குரிய ஆதனம். வடக்கு சின்னத்தம்பி வல்லிபுரத்துககு விடப்பட்ட காணியும். இதில் சொல்லப்படும் 2ம் காணியும். மேற்கு சரவணை பெரியதம்பிக்குரிய ஆதனம். தெற்கு தம்பு நாகலிங்கத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இவ்வெல்லைப்படி இதடங்கலும். இதன் வடக்கெல்லைத் துண்டாகிய சின்னத்தம்பி வல்லிபுரத்துக்கு விடப்பட்ட காணிக்குள்ள கிணற்றில் இதற்குரிய பங்கும். இதிற் சொல்லப்படும் 2ம் காணிககூடாகப் போகும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும். இன்னும் இதைச் சேர்ந்தவைகளனைத்தும். ஆனுல் மேற்கெல்லைக் காணிக்குரிய பாவிப்பு. இதன் வடக்குப்பக்கமாக வேலியருகாக இரண்டு முழப்பாதைபுறநீங்கல். பதிவிலக்கம் E 334-29.

2. ஷை இறை மலப்பை வளவு'' பர. கில இலாச்சம் காலும் ($\frac{1}{4}$) வான்பயிர் செய்பயிர்களும் இதற்கெல்லை கிழக்கு சரவணை பெரியதம்பிக்கு விடப்பட்ட காணி, வடக்கு றேட்டு, மேற்கு கோவிலுக்குரிய ஆதனம், தெற்கு இதிற் சொல்லப்பட்ட 1ம் காணி. இவ்வெல்லைப்படி இதடங்கலும். பதிவிலக்கம் E 334/30.

அ வெற்றிவேலு
கொமிஷனர்.
19, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம், 3-4-63.
M. 8 12-4-63.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 12-4-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர், நம; சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org